OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11410

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.06.2026

Accepted: 01.08.2026

Published: 01.10.2026

Citation:
Madhanraj, R. "The Punnai Tree from an Ecological Perspective." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 29–37.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11410

*Corresponding Author:
mathantamil91@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Punnai Tree from an Ecological Perspective

R. Mathanraj, **M.A., B.Ed., SET., NET., Ph.D. (BDU)**
Assistant Professor, Department of Tamil
Srinivasan College of Arts and Science, Perambalur
https://orcid/0009-0005-3631-433X

Abstract

The study of plants from an ecological perspective has emerged as an important interdisciplinary approach in literary research, enabling scholars to explore literary texts from multiple dimensions and uncover their underlying meanings. Sangam literature contains numerous references to plants that reflect the ecological knowledge and environmental awareness of ancient Tamil society. An ecological study of these plants helps to reveal their relationship with human life, culture, and the natural environment. In the present context of increasing environmental concerns, an examination of the plant ecological concepts embedded in Sangam literature is both relevant and significant, as it contributes to a deeper understanding of traditional Tamil ecological knowledge and its relevance for future generations.

Keywords: *Ettuthogai, Guardian Tree, Kings, Soldiers, Leaders, and The Public, The Beach, Fisher Man, Meeting.*

References

1. Puliyur Kesikan (Commentator). Akananuru. First edition, August 2012. Sarada Pathippagam, Chennai - 1.
2. Ira. Panchavarnam. Kapilar's Kurinjippattu Plants (Kapilarin Kurinjippattut Thavarangal). Panchavarnam Pathippagam, Panruti. Edition 2013.
3. Dr. V. Nagarajan (Commentator). Kuruntokai. Fifth edition, October 2014. New Century Book House (P) Ltd., Chennai - 98.
4. P. L. Samy. Description of Plants and Creepers in Sangam Literature (Sanga Ilakkiyathil Sedi Kodi Vilakkam). South India Saiva Siddhanta Works Publishing Society, Tirunelveli. Edition 1967.
5. G. Manickavasagan (Commentator). Silappathikaram. Fifth edition, December 2008. Uma Pathippagam, Chennai - 01.
6. Subramanian, S. V. Plants in Tamil Life (Tamizhar Vazhvil Thavaram). Meyyappan Pathippagam, Chidambaram. First edition, 2014.
7. Balasubramanian, K. V. (Commentator). Natrinai. New Century Book House (P) Ltd., Chennai. Fifth edition, 2014.
8. M. Kavitha Devi. Environments Depicted in Natrinai (Natrinai Kaattum Soozhalgal). Sarada Pathippagam, Chennai. Edition 2013.
9. M. Varadarajan. Nature in Ancient Tamil Literature (Pazhanthamizh Ilakkiyathil Iyarkai). Pari Nilayam, Chennai. Edition 2011.
10. Dhandapani, Durai (Commentator). Manimekalai. Uma Pathippagam, Chennai. Fourth edition, 2010.
11. R. S. Narayanan. Trees That Give Life (Vazhvu Tharum Maram-gal). Thamarai Publications. Edition 2009.

சூழலியல் நோக்கில் புன்னை மரம்

இரா. மதன்ராஜ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்

ஆய்வுச் சுருக்கம்
இலக்கியங்களைப் பன்முக நோக்கில் அறிவியல் முறையில் ஆராய்ந்து கருத்துக்களை வெளிக்கொண்டு வரும் பாங்கு ஆய்வுலகில் வளர்ந்து வருகின்றது. சங்க இலக்கியத்தில் தாவரங்களை சூழலியல் நோக்கில் ஆராய்ந்து வெளிப்படுத்தும் வகையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. சூழலியல் நோக்கில் தாவரங்கள் குறித்து ஆராய்ந்து, அவை மக்களின் வாழ்வியலோடு கொண்டிருக்கும் தொடர்புகளை வெளிக்கொணர்வதாக இவ் ஆய்வு அமைகிறது.

முக்கியச் சொற்கள்: *எட்டுத்தொகை, காவல் மரம், மன்னர்கள், வீரர்கள், தலைவன், தலைவி, பொது மக்கள், கடற்கரை, மீனவர்கள், சந்தித்தல், புன்னை மரம், சங்க இலக்கியம்.*

முன்னுரை

இலக்கியங்கள் தாம் படைக்கப்படும் கால, சமுதாயச் சூழலைப் பின்புலமாகக் கொண்டுள்ளன. படைப்பாளர்கள் காலம், இடம், இயற்கை, பண்பாட்டுச் சூழல் முதலியவற்றைப் பின்புலமாகக்கொண்டு கருத்துக்களைப் பதிவுச் செய்கின்றனர். சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்த சூழலியலைத் தாவரங்கள் மூலம் அறியமுடிகிறது.

சூழலியல் – அகராதிகள் விளக்கம்

சூழலியல் என்ற சொல்லிற்கு மனிதர்கள் வாழும் இடத்தைச் சுற்றிருக்கும் இயற்கைப் பொருள்களின் தொகுதி, மனிதர்களின் செயலுக்கான மன அம்சங்களின் தொகுப்பு[1] என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கூறுகிறது. நர்மதா தமிழ் அகராதி சூழலியல் என்ற சொல்லிற்கு சூழ்நிலை, சுற்றுப்புறத்திற்கு ஏற்றபடி அமைந்திருக்கும் காற்று, நிலம், நீர், விலங்குகள், தாவரங்கள், பிற உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சி படிப்பு[2] என்று விளக்கமளிக்கிறது.

சூழலியல் என்ற சொல்லிற்கு மக்கள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை தங்களுக்கிடையே கொண்டுள்ள தொடர்புகள் மற்றும் அவை தங்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் கொண்டுள்ளத் தொடர்புகளும், மேற்கண்டவைகள் பற்றிய அறிவியல் ஆய்வு[3] என்று Mega Deluxe Dictionary குறிப்பிடுகிறது.

சூழலியல் – அறிஞர்கள் திறனாய்வாளர்கள் விளக்கம்

இலக்கியத் திறனாய்வாளர் பால்கிரேவ், இயற்கையும் மனிதனும் மணம் செய்துகொள்ளும் உறவைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது[4] என்று கூறுகிறார். மேலும் நற்றிணை காட்டும் சூழல்கள் என்னும் நூலில் தாவர இன வகைகளான மரம், செடி, கொடி, மலர் ஆகியவற்றின் வாயிலாக மாந்தர்தம் வாழ்வில் ஏற்படுகின்ற தாக்கத்தை இயற்கைச்சூழல் விளக்கிக் கூறுகின்றது[5] என்று மு.கவிதாதேவி குறிப்பிடுகிறார்.

மு.வரதராசன் பழங்கால மனிதனின் பழக்க வழக்கங்கள், கொள்கை குறிக்கோள்கள், இயல்செயல்கள் யாவும் இயற்கைச் சூழ்நிலையில் தான் உருவாக்கப் பட்டது[6]

என்று பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் நூலில் குறிப்பிடுகிறார். மேற்கண்ட விளக்கங்கள் சூழலியல் என்பது மனிதனுக்கும் விலங்குகள், பறவைகள், தாவரங்கள், நிலம், நீர், காற்றுப் போன்றவற்றுக்கும் இடையேயான உறவுகளைக் குறிப்பிடுவதாகும்.

புன்னை மரம்

மரங்கள் மனித வாழ்வாதாரத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றன. சங்க காலப் புலவர்கள் போற்றிப் பாடிய மரங்களில் புன்னை மரம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். புன்னை மரத்தின் அறிவியல் பெயர் கலோபில்லம் இனோபில்லம் (Calophyllum Inophyllum) ஆகும். புன்னை மரம் இயல்பாய் வாழுமிடம், கிளைகள், இலைகள், மொக்குகள், பூக்கள், மகரந்த தாது, காய்கள் ஆகியவற்றைக் கண்டுணர்ந்து சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். தமிழ்நாட்டில் பல அரிய மரங்களில் புன்னை மரமும் ஒன்றாகும். இந்த மரம் வண்டல் படிந்த பூமியில் சிறப்பாக வளரக்கூடியதாகும். கடற்கரை ஓரத்தில் ஒரு சில மரங்களே வளரக்கூடியவை. கடற்கரைக்குச் சிறிது தள்ளிக் காணப்படும் கானலில் வளரும் மரங்களில் மிகவும் எளிதாகவும், பொதுவாகவும் காணப்படுவது புன்னை மரமென்று செடி நூலார் கருதுகின்றனர்[7] என்று பி.எல். சாமி புன்னை மரம் குறித்து விளக்கம் தருகிறார். மேலும், கடற்கரையை அடுத்த சூழ்நிலையில் கூட்டமாகப் புன்னை மரம் காணப்படுவதாகச் செடி நூலாரும் கூறுவர்[8] என்றும் பி.எல். சாமி உரைக்கின்றார்.

மக்கள் வாழ்வில் தல வழிப்பாடும், பெருந்தெய்வ வழிபாடும், கோயில்களும் பிரபலமடையத் தொடங்கியவுடன் புன்னை மரமும் அதிக முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. பண்டைய தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில்தான் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதற்குக் காரணம் புன்னை ஒரு கடற்கரையோரத் தாவரம் ஆகும் என்பது தான். இந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட பெருந்தெய்வக் கோவில்கள் பலவற்றோடு தல மரங்களாகப் புன்னை மரம் தொடர்புப் படுத்தப்பட்டது[9].

புன்னை மரத்தின் தோற்றப் பொலிவு

புன்னை மரம், இலத்தின் மொழியில் இதன் பெயர் கோலோ ஃபைலம். இதன் பொருள் இலையின் அழகு[10] என்பதாகும் என ஆர்.எஸ்.நாராயணன் கூறுகிறார். நெய்தல் திணையில் கடற்கரை ஓரத்தில் மிகுதியாகக் காட்சித் தரும் மரமாகப் புன்னை மரம் திகழ்கிறது. ச.வே.சுப்ரமணியன் புன்னை மரத்தின் இலை, விதை, பூ, பட்டை, பிசின் அனைத்தும் பயன்படும்[11] என மருத்துவப் பயன்பாடு பற்றி எடுத்துரைக்கிறார்.

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகம் தொறும்
வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிர[12]

என்று புன்னை மரத்தின் தோற்றத்தைப் பற்றி உலோச்சனார் நற்றிணை பாடலில் குறிப்பிடுகிறார். புன்னை மரம் இரும்பைப் போன்ற நிறமுடையது என்றும் இலைகளைக் கொண்டது என்றும் அந்த இலைகளில் வெள்ளி போன்ற மகரந்தத் தாது இருக்கும் என்று உரைக்கிறார். புன்னை மரப்பட்டை சாம்பல் பழுப்பு நிறமுடையது அல்லது கருப்பு பழுப்பு நிறமானது. தடிப்பானவை மற்றும் துளித்துளியாக ஒளி ஊடுருவும் தன்மைக் கொண்டது[13] என்று இரா.பஞ்சவர்ணம் குறிப்பிடுகிறார்.

புன்னை மரத்தை உறவாக நினைத்தல்

மக்கள் வாழ்வில் மரங்கள் இரண்டறக் கலந்திருப்பதை, உலக இலக்கியங்களில் ஓரறிவு உயிரை மகளாக, உடன் பிறந்தவளாகக் கருதும் எண்ணத்தைத் தமிழ் இலக்கியம் தான் முதன் முதலில் குறித்துள்ளது. தாவரங்களோடு ஒட்டி, உறவாடி வாழ்ந்திருந்தால் இவ்வுணர்வும் எண்ணமும்

தமிழர்க்குத் தோன்றி இருக்கலம்[14] என்று ச.வே.சுப்ரமணியன் குறிப்பிடுகிறார். புன்னை மரத்தைத் தாய் தன் முதல் மகளாகவும், மகள் தன்னுடன் பிறந்த தமைக்கையாகவும் கருதும் வழக்கம் அக்காலத் தமிழ்ச் சமூகத்தில் நிலவியதை,

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது
நம்மினும் சிறந்தது நுவ்வையா குமென்று
அன்னை கூறினாள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வளம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழ கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே[15]

என்று நற்றிணை பாடலில் புன்னையைத் தன் முதல் மகளாகத் தாய் கருத, அப்புன்னையைத் தன் உடன்பிறந்த தமைக்கையாக மகள் கருதுகிறாள். இயற்கையோடு இயைந்து இன்பக் காட்சியாக இக்கருத்து அமைகிறது. இதன் மூலம் மனித வாழ்வில் புன்னை மரம் நெருங்கிய உறவாகச் சூழலியளோடு ஒன்றிணைந்ததை அறியமுடிகிறது.

புன்னை இலையின் செயல்

தலைவனின் தேர் திரும்பி வரும் போது புன்னையின் பச்சை இலையைத் தொலைவிலிருந்து கண்ட குதிரை அஞ்சுகிறது. குதிரை அதை மலை என்றும், மரமென்றும், மலரென்றும், இலை என்றும், மகரந்தம் என்றும், இன்னப் பிரவென்றும் திட்டமாக வரையறுத்துக் காணமுடியாத நிலையில் மயங்கி நிற்கிறது. இதனை,

பொன்னின் அன்ன நறுந்தாது உதிரப்
புலிப்பொறிக் கொண்ட பூநாறு குரூஉச்சுவல்
வரிவண்டு ஊதலின் புலிசெத்து வெரீஇப்
பரியுடை வயங்குதாள் பந்தின் தாவத்
தாங்கவும் தகைவரை நில்லா ஆங்கண்[16]

என்று நற்றிணை பாடலில் புன்னையின் இலைகள் சாலையில் உள்ளபோது தலைவன் போர்புரிந்து விரைவாகத் தலைவியைக் காண வரும் நிலையில் தன் குதிரை குழம்பிய நிலையைக் காட்டுகிறது. இதன் மூலம் தலைவனும் தலைவியும் சந்திக்கும் நிகழ்வில் புன்னை மரத்தின் இலையானது இடையூறாக அமைந்து மயக்கத்தை ஏற்படுத்துதியதைக் காணமுடிகிறது.

காவல் மரம்

சங்க காலத்தில் மக்கள் மரங்களைத் தெய்வமாகவும், காவல் மரமாகவும் வைத்துப் போற்றியும் பாதுகாத்தும் உள்ளனர். அவ்வாறு பாதுகாத்தவற்றுள் ஒன்று புன்னை மரம் ஆகும். இதனை,

.... திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல் இணர்ப் புன்னை போல[17]

என்று அகநானூறு பாடல் குறிப்பிடுகிறது. தலைவியை ஒரு நாள் கோலால் செவிலித்தாய் அடிக்கும்போது, அன்னி என்னும் மன்னன் தித்தன் என்ற மன்னனின் காவல் மரமாகிய புன்னை மரத்தை வெட்டி சாய்க்கும்போது மரத்திற்கு ஏற்பட்ட துன்பத்தினைப் போல் செவிலித் தாய்க்கும் துன்பத்தைத் தந்தது என்று அகநானூறு விளக்குகின்றது. இதன் மூலம் தித்தன் என்ற மன்னனின் காவல் மரம் புன்னை மரம் என்றும், அதனை மக்கள் வணங்கி உள்ளதையும் அறியமுடிகிறது. மேலும்,

அன்னியும் பெரியன் அவனினும் விழுமிய
இருபெரு வேந்தர், பெரு களத்து ஒழித்த
புன்னை விழுமம் போல[18]

என்னும் நற்றிணை பாடல் புன்னை மரம் காவல் மரமாக இருந்ததை எடுத்துரைக்கிறது. புன்னை மரத்தினைக் காவல் மரங்களில் ஒன்றாக அரசரும், மானத்திற்கு ஈடாக மக்களும் பாதுகாத்து வந்தனர். இதனை அழிப்பது அந்த நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் அவமானத்தையும் தோல்வியையும் தருவதாகக் கருதிய மக்கள் அதனைத்

தங்களுடைய உயிரினும் மேலாகக் கருதி வணங்கியும், பாதுகாத்தும் வந்தனர். அன்னி என்ற மன்னனுக்கும் திதியன் என்ற மன்னவனுக்கும் இடையே ஏற்பட்ட போரில் அன்னியால் திதியனின் காவல் மரமான புன்னை மரம் வெட்டி சாய்க்கப்பட்டது. போரில் அன்னி என்பவன் வெற்றி பெற்றான். எனவே மன்னர்கள் வெற்றிப் பெற்ற பின்பு அவர்களின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தப்பட்டதையும் அறியமுடிகிறது.

புன்னை மரத்தில் தோணியைக் கட்டுதல்

ஐவகை திணைகளில் ஒன்றாகத் திகழ்வது நெய்தல் ஆகும். நெய்தல் நிலமான கடற்கரையில் வாழும் மக்கள் தங்கள் தொழிலான மீன் பிடித்தலை முடித்துவிட்டுக் கடற்கரையில் உள்ள புன்னை மரத்தின் அடியில் தாங்கள் கொண்டுவந்த தோணியைக் கட்டுவர்.

.... இருள் நிறப் புன்னை
நல்அரை முழுமுதல் அல்வயின் தொடுத்த
துங்கள் அம்பித் தூவல் சேர்ப்பின்[19]

என்று நற்றிணை பாடல் மூலம் கடற்கரையில் வாழும் சேரி மக்கள் தங்களது தோணியைப் புன்னை மரத்தில் கட்டி வைப்பதை உலோச்சனார் குறிப்பிடுகிறார். மீனவர்களின் வாழ்வியலில் புன்னை மரம் தோணி கட்டுவதற்கு மிகவும் பயன்பட்ட பயன்பாட்டுச் சூழலியலை அறியமுடிகிறது.

சுற்றத்தாருடன் கள் உண்ணுதல்

சங்க இலக்கியங்களில் மன்னர்கள், வீரர்கள், மக்கள், புலவர்கள் போன்றோர் வெற்றிகளிப்பிலும், அன்பின் காரணமாகவும், உணவு பொருள்களில் ஒன்றான கள்ளைக் குடித்து மகிழ்வோடும் இருந்தனர். இதனை,

.... வைகறைக்
கடல்மீன் தந்து கானற் குவைஇ
ஓங்கு இரும் புன்னை வரிநிழல் இருந்து
தேம்கமழ் தேறல் இளையோடு மாந்தி[20]

என்று நற்றிணை பாடல் பதிவுச் செய்கின்றது. கடற்கரையில் உள்ள பரதவர் மக்கள் மிகுதியான மீன்களை விடியற்காலையில் பிடித்து வந்து கரையோரத்தில் குவியலாக வைத்துவிட்டுத் தன் சுற்றத்தாருடன் மகிழ்வோடு கள்ளைக் குடித்துவிட்டு வீடு திரும்பினர். புன்னை மரம் பரதவர் மக்களின் வாழ்வில் மீன் உலர வைப்பதற்கும், கள் குடிப்பதற்கும் நிழலாக இருந்த சூழலியல் தொடர்பினை அறியமுடிகிறது.

தலைவனிடம் சிறு ஊடல்

அகவாழ்வில் தலைவன் தலைவியிடையே கூடலும், ஊடலும் நிகழ்வதுண்டு. இருவரும் சந்திக்கும் இடங்களில் புன்னை மரமும் ஒன்றாகும். இதனை,

.... வார்மணற் சேர்ப்பண்
இறைபட வாங்கிய முழவு முதற்புன்னை
மாஅரை மறைகம் வம்மதி[21]

என்று நற்றிணை பாடல் தெரிவிக்கின்றது. தலைவன் தலைவியைக் காணப் புன்னை மரத்தின் நிழலில் நிற்கிறாள். தலைவன் வருகையின் போது அவனை விளையாட்டாகச் சிறிது துன்பமடைய செய்ய தலைவி புன்னை மரத்தின் பின்புறம் மறைந்துகொண்டு விளையாடி, பின்பு ஒன்று சேர்கின்றனர். தலைவன் தலைவி ஊடல் கொள்ளும் இடங்களில் புன்னை மரமும் காணப்படுகின்ற சூழலியலை அறியமுடிகிறது.

மீனவர் தங்குமிடம்

நெய்தல் திணையில் வாழும் மக்களின் முதன்மைத் தொழிலாகவும், உயிர் நாடியாகவும் இருப்பது மீன் பிடித்தல் ஆகும். மீன்களைப் பிடிக்க செல்லும் முன்பும், பின்பும் தங்களுடைய வலையைக் கடற்கரையில் காணப்படுகின்ற புன்னை மரங்களின் நிழலில் உலர வைத்து வீட்டிற்கு சென்றனர். இதனை,

கானல் அம்சிறுகுடிக் கடல் மேல் பரதவர்
நீலநிறப் புன்னைக் கொழுநிழல் அகைஇ
தண் பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி[22]

என்று நற்றிணை பாடல் தெரிவிக்கிறது.

நெய்தல் நிலப்பகுதியான கடற்கரையில் மீன் பிடித்தல் தொழில் செய்து வாழும் மக்கள் புன்னை மர நிழலில் தங்கி சிக்குண்ட வலையைப் பிரித்து உலர வைத்தப்பின் மீன்பிடிக்கச் செல்வர். இதன் மூலம் நெய்தல் நில மக்களின் வாழ்வியலில் புன்னை மரம் நிழலுக்காகப் பயன்பட்ட சூழலியலை உணரமுடிகிறது.

மீன்களை உலர்த்துதல்

நெய்தல் நிலத்தில் வாழும் மக்களான மீனவர்கள் கடலுக்குச் சென்று இறால் மீன்களைப் பிடித்து வந்து கடற்கரை ஓரத்தில் இருக்கும் புன்னை மரத்தடியில் மீன்களை குவியலாக உலர வைப்பர். இதனை,

.... இறவின்
கணம் கொள்குப்பை உணங்கு திறன் நோக்கி
புன்னை அம்கொழு நிழல் முன் உய்த்துப்
பரப்பும்[23]

என்று நற்றிணை பாடல் மூலம் மீனவர்கள் வாழ்வில் ஓய்வெடுக்கவும், கொண்டு வந்த மீன்களையும் வலைகளையும் உலர வைப்பதற்கும் புன்னை மரம் ஓர் அங்கமாக இருந்ததை அறியமுடிகிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தில் புன்னை மரம் ஒன்றிணைந்த சூழலியலைக் காணமுடிகிறது.

தலைவி விளையாடுதல்

கடற்கரையில் தலைவன் தன்னருகில் இல்லாதபோது தலைவி தோழியுடனோ, பறவைகளுடனோ, பிடித்த விலங்குகளுடனோ விளையாடுவது இயல்பாகும். இதனை,

.... என்னோடும்
இன்இணர்ப் புன்னைஅம் புகர் நிகழ்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே[24]

என்று குறுந்தொகை பாடல் கூறுகிறது. தலைவி புன்னை மர நிழலில் நண்டைப் பிடித்து விளையாடிய காட்சியைக் காணமுடிகிறது. தலைவி கடற்கரையில் விளையாடுவதற்கு ஓர் அங்கமாகப் புன்னை மரம் காணப்படும் சூழலியலைஅறியமுடிகிறது. மேலும், புன்னை மர நிழலில் தலைவி விளையாடியதைப் போல் மணிமேகலையில் கிள்ளிவளவன் என்ற மன்னன் கடற்கரையில் புன்னை மரத்தின் நிழலில் உலாவியதைக் காணமுடிகிறது. இதனை,

உம்பளம் தழீஇய உயர்மணல் நெடுங்கோட்டுப்
பொங்குதிரை உலாவும் புன்னை அம்கானல்
கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னர்[25]

என்று மணிமேகலை கூறுகிறது. இதன் மூலம் புன்னை மரம் பிற்காலத்திலும் மக்களுக்குப் பயன்பட்டச் சூழலியலை அறியமுடிகிறது.

பொழுதுப்போக்கில் புன்னை

தலைவன் தலைவி இருவரும் புன்னை மரத்தின் அடியில் இன்புற்றுத் தங்கள் பொழுதினைக் கழித்தனர். இதனை,

பல்நாள் எவ்வம் தீர பகல் வந்து
புன்னைஅம் பொதும்பின் இன்நிழல் கழிப்பி[26]

என்று அகநானூறு பாடல் கூறுகிறது. தலைவன் தலைவி இன்புறுவதற்கும், பொழுதுப் போக்கிற்கும், மகிழ்வோடு வாழ்வதற்கும் புன்னை மரம் இன்றியமையாத இடம்பெற்றிருக்கும் சூழலியலை அறிய முடிகிறது.

பகற்குறி, இரவுக் குறிகளில் புன்னை

தலைவனும் தலைவியும் சந்திக்கின்ற இடம் குறி என்று அழைக்கப்படும். இது பகற்குறி, இரவுக்குறி என இரண்டு வகைப்படும். இருவரும் சந்திக்கும் இடத்தைத் தலைவியும், தோழியும் தேர்வு செய்வார்கள். இத்தகைய குறிகளில் புன்னை மரமும் ஒன்றாகத் திகழ்கிறது. இதனை,

பூவேய் புன்னைஅம் தண் பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே[27]

என்றும்,

நான் மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும் பொழில் செய்த தம் குறியே[28]

என்றும் அகநானூற்றுப் பாடல்கள்

தெரிவிக்கின்றன. இதன் மூலம் தலைவன் தலைவி சந்தித்துப் பேசுவதற்கு ஓரிடமாகப் புன்னை மரம் இடம்பெற்றிருந்த சூழலியலைக் காணமுடிகிறது.

தோழியரோடு விளையாடுதல்

தலைவனுக்குத் தலைவி எவ்வாறு உயிரோ அது போல் தலைவிக்கு அவளுடன் இருக்கின்ற தோழியும் உயிராவாள். காலையிலும், மாலையிலும் தலைவி தோழியுடன் சோலையில் நீராடி விளையாடுவாள். தோழி தன் வாழ்வைத் தலைவிக்காக அர்ப்பணிக்கிறாள். இவர்களின் விளையாட்டுகளில் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் இடம்பெறுகின்றன. புன்னை மரத்தின் அடியில் விளையாடும் தலைவியின் விளையாட்டை,

.... குறுமகள்
விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த
புன்னை நுண் தாது பொன்னின் நொண்டு[29]

என்று அகநானூறு தெரிவிக்கின்றது. கடற்கரையில் தலைவியும், தோழியும் பசுமையான புன்னை மரத்தில் உள்ள மகரந்தத் தாதுவைப் பொன் என எண்ணி அதனோடு இருவரும் விளையாடி மகிழ்ந்தனர். நெய்தல் நிலத்தில் வாழும் தலைவி, தோழியர் விளையாட்டுகளில் புன்னை மரத் தாது ஒன்றாகத் திகழ்வதோடு, அவர்கள் இயற்கையோடு விளையாடியச் சூழலியலையும் அறியமுடிகிறது.

வாழ்விடங்களில் புன்னை

நெய்தல் நில மக்கள் வாழ்வும், வாழ்விடமும் கடற்கரையைச் சுற்றியுள்ள நிலப்பரப்பாகும். இத்தகைய நிலப்பரப்பினைச் சேரி என்று அழைப்பர். சேரியில் வாழும் மக்களின் இருப்பிடத்தைச் சுற்றி புன்னை மரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதனை,

.... நம்
பராரைப் புன்னைச் சேரி[30]

என்று நற்றிணை குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் நெய்தல் நில மக்கள் தங்கள் இருப்பிடத்தைச் சுற்றிலும் புன்னை மரத்தை வளர்த்து இயற்கையோடு வாழ்ந்து வந்த சூழலியலை உணரமுடிகிறது.

காத்திருத்தலும் சந்தித்தலும்

பண்டையத் தமிழ் இலக்கியங்களில் அகவாழ்வில் தலைவியைத் தலைவன் காண யாவரும் அறியாமல் இரவிலும் பகலிலும் சென்று, கண்டு இன்புற்ற நிகழ்வுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. களவு வாழ்க்கையிலிருந்து விரைவில் கற்பு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தலைவி தலைவனிடம் வற்புறுத்துவதுண்டு. இதனை,

பரா அரைப் புன்னை வாங்குசினைத் தோயும்
கானல்அம் பெருந்துறை நோக்கி[31]

என்று அகநானூற்றுப் பாடலும்,

கருங்கோட்டுப் புன்னை பூம்பொழில் புலம்ப
இன்னூரம் வாரார்; வரூஉம்,
பலமீன் வேட்டத்து என்னையர் திமிலே[32]

என்ற குறுந்தொகை பாடலும்,

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்[33]

என்று சிலப்பதிகாரமும் தெரிவிக்கின்றன. தலைவனுக்காகத் தலைவி புன்னை மரத்தடியில் காத்திருந்த அகவாழ்வின் சூழலியலைப் புலப்படுத்துகின்றன.

முடிவுரை

தலைவன் தலைவியின் வாழ்வியலில் தாங்கள் சந்திப்பதற்குப் புன்னை மரம் அங்கமாக இருப்பதை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. கடற்கரையில் வாழும் பரதவ மக்களின் வாழ்விலும், தலைவன் தலைவியர் வாழ்விலும் புன்னை மரம் ஓய்வெடுக்க நிழலாகவும், சந்தித்துப் பேச ஏற்ற இடமாகவும், மீன்களை உலர வைப்பதற்காகவும், உறவாகவும், விளையாடுவதற்காகவும், காவல் மரமாகவும் பயன்பட்ட இயற்கைசார் சூழலியலை அறியமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி., ப.466.
2. நர்மதாவின் ஆங்கிலம்-தமிழ் அகராதி., ப.287.
3. MEGA DELUXE DICTIONARY.,P.302.
4. மு.கவிதா தேவி.,நற்றிணை காட்டும் சூழல்கள்., ப.1.
5. மேலது.,ப.6.
6. மு.வரதராசன்., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை., ப.36.
7. பி.எல்.சாமி., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்., ப.122.
8. மேலது.,ப.122.
9. இந்து தமிழ் நாளிதழ்., இணையத்தளம்., 25.01.2016.
10. ஆர்.எஸ். நாராயணன்., வாழ்வு தரும் மரங்கள்., ப.188.
11. ச.வே.சுப்ரமணியன்., தமிழர் வாழ்வில் தாவரம்., ப.54.
12. கு.வெ.பாலசுப்ரமணியன் (உ.ஆ.)., நற்றிணை., பா.எண். 249: 1-4.
13. இரா.பஞ்சவர்ணம்., கபிலரின் குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள்., ப.306.
14. ச.வே.சுப்ரமணியன்., தமிழர் வாழ்வில் தாவரம்., ப.27.
15. கு.வெ.பாலசுப்ரமணியன்(உ.ஆ.)., நற்றிணை., பா.எண். 172:1-10.
16. மேலது., பா.எண். 249:4-8.
17. இரா.ஜெயபால் (உ.ஆ.)., அகநானூறு., பா. எண். 145:11-13.
18. கு.வெ.பாலசுப்ரமணியன்(உ.ஆ.)., நற்றிணை., பா.எண். 180:6-8.
19. மேலது., பா.எண். 354:5-7.
20. மேலது., பா.எண். 388:5-8.
21. மேலது., பா.எண். 307:5-7.
22. மேலது., பா.எண். 4:1-3.
23. மேலது., பா.எண். 101:2-4.
24. வி.நாகராசன்(உ.ஆ.)., குறுந்தொகை., பா.எண். 303:5-7.
25. துரை.தண்டபாணி (உ.ஆ.)., மணிமேகலை., கா. 24. அடி. 27*29.
26. இரா.ஜெயபால் (உ.ஆ.)., அகநானூறு., பா.எண். 340:1-2.
27. மேலது., பா.எண். 240:14-15.
28. மேலது., பா.எண். 360:18-19.
29. மேலது., பா.எண். 230:5-7.
30. கு.வெ.பாலசுப்ரமணியன் (உ.ஆ.)., நற்றிணை., பா.எண். 145:8-9.
31. இரா.ஜெயபால் (உ.ஆ.)., அகநானூறு., பா.எண். 270:6-7.
32. வி.நாகராசன் (உ.ஆ.)., குறுந்தொகை., பா.எண். 123:3-5.
33. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ.)., சிலப்பதிகாரம்., கா.7. அடி.21-22.

துணைநூற் பட்டியல்

1. புலியூர்க் கேசிகன்(உ.ஆ.)., அகநானூறு., முதற் பதிப்பு., சாரதா பதிப்பகம்., சென்னை- 2012.
2. இரா.பஞ்சவர்ணம்., கபிலரின் குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள்., பஞ்சவர்ணம் பதிப்பகம்., பண்ருட்டி. பதிப்பு, 2013.
3. முனைவர் வி.நாகராசன் (உ.ஆ.)., குறுந்தொகை., ஐந்தாம் பதிப்பு., அக்டோபர் - 2014., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை.
4. பி.எல்.சாமி., சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்., தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். திருநெல்வேலி. பதிப்பு-1967.
5. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ.)., சிலப்பதிகாரம்., ஐந்தாம் பதிப்பு, டிசம்பர், உமா பதிப்பகம், சென்னை, 2008.
6. சுப்பிரமணியன்.ச.வே. தமிழர் வாழ்வில் தாவரம். மெய்யப்பன் பதிப்பகம். சிதம்பரம். முதற்பதிப்பு, 2014.
7. பாலசுப்பிரமணியன்.. கு.வெ, (உ.ஆ.), நற்றிணை.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.

8. மு.கவிதா தேவி., நற்றிணை காட்டும் சூழல்கள்., சாரதா பதிப்பகம்., சென்னை., பதிப்பு-2013.
9. மு.வரதராசன்., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை., பாரி நிலையம்., சென்னை., பதிப்பு-2011.
10. தண்டபாணி. துரை. (உ.ஆ.). மணிமேகலை.உமாபதிப்பகம்.சென்னை. நான்காம் பதிப்பு - 2010.
11. ஆர்.எஸ்.நாராயணன்., வாழ்வு தரும் மரங்கள்., தாமரை பப்ளிகேஷன்ஸ்., பதிப்பு-2009.